நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No.288/2020

## P.W.8 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கி. தொல்காப்பியன் |
| தந்தை / கணவர் பெயர் | : | கிருஷ்ணன் |
| கிராமம் | : | கொளத்தூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW8** |
| வயது | : | 60 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 29–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**3 ம் எதிரி ஆஜர், 1,2,4,6,7,8 எதிரிகள் ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–04.15 PM)

1. நான் தற்போது கொளத்தூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.11.2019 ம் தேதி மாலை 16.00 மணிக்கு மேட்டுர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமை காவலர் 903 கலாவதி என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது வாதி இளவரசி(21) என்பவர்

நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகாரினை பெற்றும், மேட்டூர் அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.5/2019, ச.பி. 147, 294(பி), 498(ஏ), 494, r/w 109 இ.த.ச வின் கீழ் வழக்கு பதிவுசெய்தும், கனம் குற்றவியல் நடுவர் எண்.1 மேட்டூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை பொறுப்பு காவல் ஆய்வாளர் மேட்டூர் காவல் நிலையம் எனக்கு அனுப்பி வைத்ததை பெற்றும் இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டேன்.

2. பின்னர் 16.11.2019 சம்பவயிடம் சென்று சாட்சிகள் கதிர்வேல், தங்கசெல்வம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். தயார் செய்த பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். அத்துடன் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். **(பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**
3. பின்னர் சாட்சிகள் வாதி இளவரசி, முருகன், சுமதி, செந்தாமரை, ராணி, பழனி, துரையன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்தும், சம்பவம் நடந்தது உண்மையென தெரியவந்ததால் எதிரிகளை தேடிவந்த நிலையில் கிடைக்க பெற்ற தகவலின் அடிப்படையில் கொளத்தூர் கண்ணாமூச்சி 4 ரோடு அருகில் 04.12.2019 ம் தேதி எதிரிகள் சரவணன், ராணி, சுப்ரமணி ஆகியோர்களை வழக்கின் நிமித்தம் காரணம் கூறி கைதுசெய்தும் எதிரிகளுடன் நிலையம் ஆஜராகியும், அடைப்பு காவல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றம் காவலுக்கு அனுப்பி வைத்தேன்.
4. பின்னர் இவ்வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் திருமதி. கார்த்திகாயனி அவர்கள் வசம் தொடர் விசாரணைக்காக ஒப்படைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்ட தேதியில் தான் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டிருக்கும். 16.11.2019 ம் தேதிதான் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டது. வழக்கு கோப்பு என்னிடம் 16.11.2019 ம் தேதி மாலை 16.00 மணிக்கு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. 16.11.2019 ம் தேதி அ.சா.1 இளவரசியை நான் விசாரித்தேன். அவரது வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

2. 16.11.2019 ம் தேதி விசாரணையின்போது கீழ்மூலப்பாறையூர் பகுதியில் இருந்து தனது கணவர் வீட்டில் இருந்து வருவதாக வாக்குமூலம் கொடுத்தார். கொளத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்டுதான் மேற்படி பகுதி உள்ளதென்றால் சரிதான். மேற்படி அ.சா.1 இளவரசி 1 ½ மாதம் தான் கொளத்தூரில் குடியிருந்ததாகவும் அதன்பிறகு குமாரபாளையத்தில் இருந்து வருவதாகவும் எனது விசாரணையில் சொன்னார்.

3. இந்த வழக்கு சம்மந்தப்பட்ட புகார் கொடுப்பதற்கு முன்பு கொளத்தூர் காவல் ஆய்வாளரிடம் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கான ரசீதை தாக்கல் செய்துள்ளார்கள். ஆனால் புகாரின் விவரம் அதனுடன் இணைத்து தாக்கல் செய்துள்ளேன். அந்த ரசீது எண்.29/2019 ல் தனது கணவர் கார்த்திக் என்பவர் காணாமல் போய்விட்டதாகவும், தனது மாமனார் மாமியார் துன்புறுத்துவதாகவும் உள்ளது. நான் சொன்னவாறு அ.சா.ஆ.2 புகார் ரசீது குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் மேற்படி விவரங்களை குறிப்பிட்டு வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

4. அ.சா.1 இளவரசி தன்னை துன்புறுத்தியதாக மருத்துவ ஆவணங்கள் எதையும் எனது விசாரணையில் குறிப்பிடவில்லை. அ.சா.1 இளவரசி கொடுத்த புகாரில் தனது கணவர் யாரை எப்போது எங்குவைத்து திருமணம் செய்துக்கொண்டார் என்ற விவரங்களை குறிப்பிட்டு புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

5. நான் 16 ம் தேதியே புலன்விசாரணை தொடங்கிவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சாட்சிகள் 16 ம் தேதி கொளத்தூர் மூலப்பாறையூர் பகுதிக்கு வந்திருந்தார்கள். அங்கு வைத்துதான் அனைத்து சாட்சிகளையும் விசாரித்தேன். நான் நேரில் பார்த்ததாக விசாரணை செய்த சாட்சிகள் குமாரபாளையம் மற்றும் வெளியூரை சேர்ந்தவர்கள் என்றாலும், அவர்கள் சம்பவத்தை நேரில் பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல. அவர்கள் அவ்வாறு நேரில் பார்க்கவில்லை என்று சொல்லியிருந்தால் அது தவறு.

6. மனுரசீது எண். 39/2019 ல் தனது கணவர் கார்த்தியும், மாமியார் ராணி தினமும் பிரச்சனை செய்து வருவதாக கூறியிருப்பது என்று சொன்னால் சரிதான். மனுவின் விசாரணை அதிகாரி திருமதி. சாவித்திரி ஆவார். நான் சொன்ன

தேதியில் சம்பவயிடத்திற்கு சென்றதாக சொல்வது பொய் என்றாலும், சாட்சிகளை விசாரித்தாக சொல்வது பொய் என்றாலும், பார்வை மகசர் மற்றும் சாட்சிகளை விசாரணை செய்ததாக சொல்வது பொய் என்றாலும், அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்திலேயே வைத்து தயார் செய்தது பொய் என்றாலும் சரியல்ல.

7. பார்வை மகசரிலுள்ள விவரங்கள் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சொன்னவாறு சம்பவயிடத்திற்கு சென்றிருந்தால் பார்வை மகசரில் எனது கைப்பட எழுதியிருப்பேன் என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 இளவரசி வழக்கு பதிவுசெய்ய சொல்லி பிரச்சனை செய்ததாலும், உயர் அதிகாரிகளிடம் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்துக்கொள்வேன் என்று மிரட்டல் விடுத்ததால் உயர் அதிகாரிகள் கொடுத்த அழுத்தத்தின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், அ.சா.1 இளவரசி தனிக்குடித்தனம் போகவேண்டும் என்ற நோக்கில் பொய் புகார் அளித்துள்ளார் என்றாலும் சரியல்ல.
8. நான் சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் சொன்னவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. கொளத்தூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவுக்கும், மேட்டுர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவுக்கும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட தகவல்களை கொண்டுள்ளது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–05.00 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**